16.02.2026

O.S.No. **49/2025**

PW2- **அருணாச்சலம் – த/பெ. குத்தாலிங்கம்**

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.02.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> (2,3 பிரதிவாதிகள் தரப்பில்)

1. எனக்கு என்ன ஊர் என்றால் அச்சன்குட்டம்

2. என்னை சாட்சியம் சொல்ல யார் அழைத்து வந்தார்கள் என்றால் வாதி காளியம்மாள் அழைத்து வந்தார்.

3. காளியம்மாள் கணவர் முருகனுக்கு என்ன ஊர் என்றால் அச்சன்குட்டம் கிராமம். முருகனின் பெற்றோர் பெயர் என்ன என்றால் ராஜாமணி, தங்கத்தாய் ஆகும்.

4. முருகன் அச்சன்குட்டத்தில் எந்த தெருவில் உள்ளார் கருப்பசாமி கோவில் தெருவில் உள்ளார்.

5. நான் எந்த தெருவில் வசித்து வருகிறேன் என்றால் நானும் கருப்பசாமி கோவில் தெருவில் தான் வசித்து வருகிறேன்.

6. காளியம்மாளுக்கு சொந்த ஊர் என்ன என்றால் பாண்டியாபுரம் ஆகும்.

7. காளியம்மாளுக்கு முதலில் பாண்டியாபுரத்தை சேர்ந்த கனகராஜ் என்பவருடன் திருமணம் நடந்தது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

8. முருகனுக்கு முதலில் ரோஸ்மேரி என்ற பெண்ணுடன் திருமணம் நடந்தது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

9. இருவருக்கு இது இரண்டாம் திருமணம் என்பதால் வருவாய் நிலை ஆணையின் படி 2,3 பிரதிவாதிகளால் வாரிசு சான்றிதழ் வழங்க இயலாது என்பதால் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

10. எப்போது காளியம்மாளுக்கு, முருகனுக்கும் திருமணம் நடந்தது என்றால் 2013 ம் வருடம் நடந்தது.

11. வாதி எனது உறவினர் என்பதால் வழக்கு விவரங்கள் தெரியாமல் வாதிக்கு ஆதரவாக சாட்சிய அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/--J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி